செய்தி வெளியீடு எண்: 56 நாள்: 21.11.2021.

**தேனி மாவட்டம்**
**10-வது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் - தடுப்பூசி செலுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்:-**

**********

தேனி மாவட்டம், தேனி – அல்லிநகரம் நகராட்சி ஆரம்ப பள்ளி, பழனிசெட்டிபட்டி மின்வாரிய அலுவலகம், வீரபாண்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் இன்று (21.11.2021) நடைபெற்ற 10-வது மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில், தடுப்பூசி செலுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, கொரோனா தடுப்பூசி முகாம்களுக்கு வழங்கப்பட்ட கோவிஷீல்டு, கோவாக்சின் தடுப்பூசிகளின் எண்ணிக்கை, முகாமிற்கு தடுப்பூசி செலுத்தி கொள்ள வருகை தந்த நபர்களின் எண்ணிக்கை குறித்த பதிவேடுகள், கொரோனா தடுப்பூசி முதல் கட்டம், இரண்டாம் கட்டம் செலுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, தடுப்பூசி மருந்துகள் இருப்பு, முகாம்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள், கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் ஆகியவைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

தேனி மாவட்டத்தில் நேற்றைய தினம் (20.11.2021) வரை 10,58,145 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் முதல் தவணையாக 6,64,507 தடுப்பூசிகளும், இரண்டாம் தவணையாக 3,93,638 தடுப்பூசிகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு 13,270 தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளது. தமிழக அரசின் உத்தரவின்படி, தேனி மாவட்டத்தில் 404 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மாபெரும் தடுப்பூசி முகாம்களின் மூலம் 1,50,000 கோவிஷீல்டு தடுப்பூசிகளும், 40,000 கோவாக்சின் தடுப்பூசிகளும் என மொத்தம் 1,90,000 தடுப்பூசிகள் செலுத்திட திட்டமிடப்பட்டு, தடுப்பூசி செலுத்தும் பணி மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

கொரோனா தடுப்பூசி செலுத்துவதன் மூலம் மட்டுமே நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்திட முடியும். எனவே, பொதுமக்கள் கொரோனா தடுப்பூசி முகாம்களில் கலந்து கொண்டு, தடுப்பூசி செலுத்திக் கொண்டு, தேனி மாவட்டத்தினை கொரோனா நோய்த் தொற்று இல்லாத மாவட்டமாக உருவாக்கிடவும், அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த் தொற்று நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பினை அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியின் சார்பில் இன்றைய தினம் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமில் கலந்து கொண்டு, கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**